# வேலி தாண்டாதிருக்கச் ஆறு வழிகள்



உங்கள் செல்லிடப் பேசியில் இடைக்கிடை முகப்புத்தகத்தில் என்ன போகிறது என்று பார்க்க ஆவலாய் இருப்பீர்கள். அப்புறமாய் நேரம் போகாவிட்டால் ஒரு படம் பார்க்கலாம் என்று தோன்றும். மாத முடிவில் தொலைபேசிக் கட்டணத்தைப் பார்த்ததும் தலையில் கை வைப்பீர்கள். தரவிறக்க எல்லை கடந்து, வேலி தாண்டிய வெள்ளாடு போல் முழி பிதுங்கும். எல்லையில்லாத் தரவிறக்க வசதி எல்லா செல்லிடப் பேசித் திட்டங்களுக்கும் இல்லை. தொலைபேசி நிறுவனங்கள் தரும் இத்தனூண்டு தரவு எல்லை முடிந்த பின்னால், மேலதிகத்திற்கு அறவிடுவது பகல் கொள்ளை தான்.

வேலி தாண்டாமல் இருக்க இதோ சில வழிகள்...

தொலைபேசி நிறுவனங்கள் தரும் இத்தனூண்டு தரவு எல்லை முடிந்த பின்னால், மேலதிகத்திற்கு அறவிடுவது பகல் கொள்ளை தான்.

1.போகும் இடங்களில் கிடைக்கும் இலவச wi-fi சேவைகளைப் பயன்படுத்துங்கள். உங்கள் செல்லிடப் பேசியின் வரையறை பற்றிய கவலை இல்லாமல்! இப்போது நூலகங்கள், கோப்பிக் கடைகள் எல்லாம் இலவசமாய் இணையத் தொடர்பு கிடைக்கிறது. உங்கள் செல்லிடப் பேசியே தன்னாலேயே என்னென்ன இணைப்புகள் கிடைக்கின்றன, எது இலவசம், எது நுழைய முடியாதது என்றெல்லாம் சொல்லித் தரும்.

2.உங்கள் தொலைபேசி நிறுவனத்தின் இணையத் தளத்திற்கு சென்று பதிவு செய்தால், தரவிறக்க எல்லைக்கு வரும்போது உங்களுக்கு தகவல் வரும்... இதற்கான செயலிகள் அவர்களிடம் இருந்தால் அவற்றைத் தரவிறக்கம் செய்து பாவியுங்கள். அவையே உங்களுக்கு தரவின் அளவைக் காட்டித் தரும்.

3.உங்கள் செல்லிடப்பேசியிலேயே உங்கள் தரவிறக்கப் பாவனை பற்றி அறிந்து கொள்ளலாம். உங்கள் செல்பேசியிலே உள்ள *Settings* இல் உள்ள *Data Usage* இல் பதிவுகள் செய்தால், எல்லையை எட்டும் போது உங்களுக்கு அறிவிக்கவும், எல்லையைத் தாண்டியதும் பாவனையை நிறுத்தவும் நீங்கள் வழி செய்ய முடியும். அதைப் பயன்படுத்துங்கள். ஆனால் உங்கள் செல்பேசி கணிக்கும் தரவுத் தொகையும் உங்கள் செல்பேசி நிறுவனம் கணிக்கும் தரவுத் தொகையும் ஒன்றல்ல என்பதை ஞாபகம் வைத்திருங்கள். செல்பேசி நிறுவனங்கள் பகல் கொள்ளைக்காரர்கள் என்று இப்போது தானே சொன்னோம். அவர்கள் எப்படித் தரவுத்தொகையைக் கணிக்கிறார்கள் என்பது கடவுளுக்கும் தெரியாது.

4.உங்கள் செல்பேசியில் *Data Usage* இல் என்னென்ன செயலிகள் (apps) எவ்வளவு தரவு பயன்படுத்தின என்று பார்க்கலாம். இதில் அதிகளவு தரவைப் பயன்படுத்தும் செயலிகளை பயன்படுத்துவதை நிறுத்தலாம். அவற்றை wi-fi பயன்படுத்தும்போது மட்டும் செயற்படுமாறு வழி செய்யலாம்.

5.படம் பார்த்தல், இணையத்தில் பாடல் கேட்டல் போன்றன அதிகளவு தரவைப் பயன்படுத்துகின்றன. அவற்றையும் குறைத்துக் கொள்ளுங்கள்.

6.உங்கள் செல்பேசியை கணனியில் இணைத்து, (இது tethering எனப்படும்) முகப்புத்தகம் பார்க்க முயற்சிக்காதீர்கள். தரவுத் தொகையை உறுஞ்சிக் குடிக்க இலகுவான வழி இது. ஒரு மாத கணக்கை ஒரு மணிக்குள் முடித்து விடும்.

இந்த வழிகளைப் பயன்படுத்தி, உங்கள் தரவுப் பாவனையைக் குறைத்தால், வேலி பாயப் போய், படக்கூடாத இடங்களில் கிழுவந் தடி குத்துவதை தவிர்க்கலாம்.


Palm Print Inc
Design & Print

• Copy
• Sign
• Print

Logo Design
Ad Design

416.284.9545
1345 Morningside Ave #8
palmprint.ca
palmprintinfo@gmail.com




## 'பின்' குறிப்பு

சுவடி தன் சுவடுகளைப் பெருமையுடன் பதித்து வெற்றிநடை போடுகிறது. அது விட்டுச் செல்லும் சுவடுகள் தங்களுக்கு மிகுந்த பயன் தருவதாகப் பலரும் பாராட்டுகிறார்கள். தாங்கள் கட்டாயமாய் அறிய வேண்டிய விடயங்கள், வேறெங்கும் கிடைக்காமல், சுவடியில் கிடைப்பதாகவும், ஒவ்வொரு விடயமும் தங்களுக்கு ஏதோ ஒரு விதத்தில் பயன் தருவதாகவும் உற்சாகப்படுத்துகிறார்கள்.

வன்னியில் வெளிவரவேண்டிய பத்திரிகைகள் இங்கே வருவதாகவும், இங்கு என்ன நடக்கிறது என்பதை அறிய ஆவலாய் இருப்பதால், கனடிய செய்தி, தகவல்களையும் சேர்த்து, பத்திரிகையாக்கும்படி ஆலோசனை கூறினார்கள். வளர்ச்சிப்பாதையில் எதுவும் சாத்தியம்!

சுவடியின் வெற்றியைப் பார்க்கும் போது, வழமையான தமிழ்ப் பாணியில் சுவடியின் சுவடுகளைப் பின்பற்றி பல அரிச்சுவடிகள் வரக்கூடும் என்றே தோன்றுகிறது.

றஞ்சினி ரேக்அவுட் றிப்போட்டர், ஈழம் மீன்மார்க்கட் மலர், அண்ணாச்சி அடைவுகடை அமுதம் என்றெல்லாம் தமிழ் மகன் நிர்வாக வர்த்தகங்கள் இதழ்கள் வெளியிட்டால், எங்கள் சமூகமும் ஆரோக்கியம் அடையக்கூடும். வெளிவரும் பத்திரிகைகள் மீன் சுற்றவும் பயன்படும்.

எப்படியோ, நாடும் இனமும் நலம், வளம் பெற வேண்டும் என்பதே எங்கள் அவா!

சுவடு பதிக்கும் சுவடி!

This newsletter is edited, printed and published by Palm Print Inc.

இச்சுவடி பாம் பிரிண்ட் நிறுவனத்தினரால் ஏடு இட்டு, அச்சிட்டு வெளியிடப்படுகிறது

பாம் பிரிண்ட்
# சுவடி
SUVADI

ஏடு 1 ஓலை 3

## பழையன கழித்து புதியன புகுத்துக!

போர்த்துக் கட்டி மூடி உறங்கிய காலம் போய், ஜன்னல்களைத் திறந்து காற்று வர ஆரம்பித்திருக்கிறது. வீட்டைத் துப்புரவு செய்து, எறியாமல் வைத்திருக்கும் பொருட்களை என்ன செய்வது என்று யோசிப்பீர்கள்.

கட்டிலுக்கு அடியிலும் கராஜினுள்ளும் தள்ளிய பொருட்களை வெளியே எடுத்து என்ன செய்வது?

பல வீடுகளில் கராஜிற்குள் காரைத் தவிர, மற்றப் பொருட்களே நிறைந்திருக்கும். கராஜிற்குள் நடக்கவே இடமில்லாமல் கார் வெளியில் குளிரில் நடுங்கி, வெயிலில் காய்ந்து...

பழைய உடைகள், கணனிகள், நைந்து போன படுக்கைகள், உடைந்த வீட்டுப் பொருட்கள் எல்லாம் எறிய மனமில்லாமல், பிறகு உதவும், திருத்திப் பாவிக்கலாம், ஆருக்காவது கொடுக்கலாம் என்று கராஜினுள் தஞ்சம் புகுந்திருக்கும்.

பல்லைக் கடித்துக் கொண்டு எறிய வேண்டியவற்றை எறியுங்கள். உடைந்த பல பொருட்களைத் திருத்துவதற்கான பணத்திற்கு புதியன வாங்கலாம்.

பழைய கணனிகள், மின்கருவிகள் போன்ற மின்னியல், இலத்திரனியல் பொருட்களை குப்பை வைக்கும் நாளில் வெளியே வையுங்கள். அடுப்பு, குளிர்சாதனப் பெட்டி போன்றவற்றிற்கு தொலைபேசியில் 311 இலக்கத்தில் நகரசபை அழைத்து விலாசத்தைக் கொடுத்தால், வெளியே வைக்க வேண்டிய நாளைக் கூறுவார்கள். அவர்கள் அதை எடுத்து மீள்பயன்படுத்துவார்கள். ஆனால், பழைய இரும்பு பொறுக்குவோர் இரவோடிரவாக அவற்றை கவர்ந்து செல்லவும் கூடும்.

பழைய ஆடைகளில் கிழிந்தவற்றை வீசி எறியுங்கள். அதையெல்லாம் தர்மம் செய்து புண்ணியம் கிடைக்கும் என்று எதிர்பார்க்காதீர்கள். (ஊருக்கு அனுப்பக் கேட்க, எறியாமல் வைத்த நைந்து போன உள்ளாடைகளைத் தந்தவர்களும் உண்டு!)

வாகனங்களிலும் இயந்திரங்களிலும் மாற்றிய எண்ணெய், டியூப் லைட்டுகள், மின்கலங்கள் போன்றவற்றை அருகில் நடைபெறும் சுற்றாடல் நாளில் கொண்டு போய் கொடுங்கள். இவற்றைக் குப்பைக்குள் போடாதீர்கள்.

பின்னால் பயன்படும் என்று வைத்த பொருட்களை கடந்த இரண்டு வருடங்களுக்குள் பாவித்திருக்கா விட்டால், அவை இடத்தை நிரப்புகின்றன என்றே அர்த்தம்.

பயன்படுத்தக் கூடியவற்றை இரட்சணிய சேனை, குட்வில் போன்ற தர்மஸ்தாபனங்களுக்கு அன்பளிப்புச் செய்யுங்கள். புண்ணியம் கட்டாயமாய் கிடைக்கும்.

ஊருக்கு கஷ்டப்பட்ட சனத்திற்கு அனுப்புவோம் என்று குளிர்கால ஜக்கட்டுகளை வைத்திருக்காதீர்கள். கால நிலை மாற்றத்தால் நம்ம ஊரில் பனி பெய்ய ஆயிரம் வருடங்கள் ஆவது எடுக்கும்.

பயன்படுத்த முடியாத இதையெல்லாம் ஊருக்கு கட்டி அனுப்பி கனடா வாழ் தமிழினத்தின் மானத்தை வாங்காதீர்கள்.

## கொல்லைப்புறக் கமத்தொழில் விளக்கம்



**மே மாத நடுப்பகுதியில், புடோல் உட்பட பல ஊர் மரக்கறிக் கன்றுகளை 99 சத விலைக்கு, 1345 மோர்னிங்சைட் அவனியூ, இல 8 ல் வாங்கலாம்.**

கொஞ்சமாய் வெயில் எறித்து, குளிர் சாடையாய் விட்டுப் போனவுடன் தோட்டத்தைக் கொத்த ஆரம்பித்திருப்பீர்கள். கடந்த சுவடியில் நன்றாகக் குப்பை கொட்டச் சொல்லி வழி காட்டியதால், நாற நாற உக்கிய குப்பையைக் கொண்டு வந்து கொட்டியிருப்பீர்கள். பிறகென்ன! குளிர் விட்டு விட்டதே, கன்றுகளை நட்டு தண்ணீர் ஊற்றினால், கோடை முழுவதும் மரக்கறி விளையும் என்று கைகள் குறுகுறுத்தால்... சற்றே பொறுங்காள்!

கனடிய காலநிலை நம் ஊர்க் காலநிலை போன்றதல்ல. எங்கள் மார்கழிப் பனியிலும் பயிர்கள் வீறு கொண்டு எழுந்து நிற்கும்.

ஆனால் இங்கே...

நம்ம ஊர்க் கத்தரி, மிளகாய், தக்காளி, பாகல், வெண்டி, கியூக்கம்பர் போன்ற கோடைகாலப் பயிர்கள் சற்றே குளிர் வந்தாலும், நடுங்கி பிராணனை விடக் கூடும். குளிர் என்றால் பனி கொட்டும் குளிர் மட்டும் அல்ல. பத்து தசம பாகை வெப்பநிலை இருக்கும்போது, காற்று வீசினால் இன்னும் குளிராகும். இந்தக் குளிரில் மிளகாய், கத்தரி போன்றன குளிர் அதிர்ச்சிக்குள்ளாகினால் பூக்க அதிக நாட்கள் எடுக்கும். சில நேரம் பூக்கவே மாட்டா. கத்தரி, மிளகாய் வைத்தோம், பூக்கவே இல்லை என்று பலர் சொல்லக் கேட்டோம். காரணம் இது தான்.

வெப்பநிலை நான்கு சதம பாகைக்குக் கீழ் சென்றால், அதிலும் நல்ல காற்று வீசியிருந்தால், அல்லது மெதுவான உறைபனி வந்தால், கன்றுகள் இறந்தே விடும். நெருப்பினால் சுட்டது போல வெந்து போயிருக்கும்.

ஆனால், கோவா இனத்தைச் சேர்ந்த கோவா, கொலார்ட், கேல், வெண்காயம், பீட்ரூட், சுவிஸ் சார்ட் போன்றன குளிருக்குத் தாக்குப் பிடிக்கக் கூடியன. அவற்றை நடலாம். ஆனாலும் குளிரும் வெயிலும் மாறிமாறி வர அவையும் வேகமாக வளர மாட்டா.

பயிர்களை நட்ட பின்னால், காலநிலை மாறி குளிர் வரும் என்று தெரிந்தால், தண்ணீர் தெளித்து, கன்றுகளை ஒளி உட்புகக் கூடிய பிளாஸ்டிக் பைகளால், போத்தல்களால் மூடி விடுங்கள். மறக்காமல் பகல் நேரம் அவற்றை எடுத்து விடுங்கள். இல்லாவிடில் வெயில் அவற்றைச் சுட்டெரித்து விடும்.

கொக்கோ கோலா பிளாஸ்டிக் போத்தல்களை பாதியாய் வெட்டி காற்று போக துளையிட்டு மூடி விடலாம். சில நேரம் கன்றுகளைப் பகல் வெயில் சுட்டெரிக்கும். இலைகளால் மூடி விடுங்கள்.

மாறி வரும் உலகக் காலநிலை காரணமாக எப்போது குளிர் தாக்கும் என்று கூற முடியாது. ரொறன்ரோ பகுதியில் விக்டோரியா தினமான மே மாதக் கடைசிக்குப் பின்னால் தான் வெப்பநிலை சீராக, மரக்கறிகளுக்கு ஏற்ற விதத்தில் இருக்கும். அதன் பின்னால் நடும் பயிர்களுக்கு ஆபத்து இல்லை. எனவே, அவசரம் வேண்டாம்.

'இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்'




கவர்ச்சிகரமான வடிவமைப்புகள்!

நியாயமான விலை!

உறுதியளித்த நேரத்தில்!

பாம் பிரிண்ட்
அச்சுக் கலையகம்

416.284.9545

palmprint.ca
palmprintinfo@gmail.com
1345 Morningside Ave #8

# குறி கண்டு குணம் நாடுவோம்



ஆரோக்கிய வாழ்வு என்பது மனித வாழ்வில் அடிப்படையானது. எவ்வளவு தான் செல்வங்களைக் குவித்தாலும், அதை அனுபவிக்க உடல் ஆரோக்கியம் இல்லாது போனால், அதனால் பயன் ஏது? மனித உடல் விசித்திரமானது. எங்களுக்குத் தெரியாமலேயே எங்களை நோய் தொற்றியும் பற்றியும் கொள்ளும்போது, அது குணம், குறிகளைக் காட்டி எங்களுக்குத் தெரியப்படுத்தும். உடல் வேதனை தரும் வரைக்கும் எம்மில் பலர் வைத்தியர் பக்கம் தலை வைத்துப் படுப்பதில்லை. பின்வரும் குணம் குறிகளைக் கண்டால் உடனடியாகவே உங்கள் குடும்ப வைத்தியரை அணுகி ஆலோசனை பெறுங்கள்.

*1. காரணம் இல்லாத உடல் மெலிவு.*

ஆறு மாதத்திற்குள் பத்து வீதம் நிறை குறைந்தால், அட, முயற்சி செய்யாமலே உடல் மெலிகிறதே என்று மகிழ்ச்சியில் திளைக்காமல், வைத்தியருக்குத் தெரியப்படுத்துங்கள். உடல் மெலிவுக்கு நீரிழிவு, மன அழுத்தம், ஈரல் நோய், புற்றுநோய், தைரோயிட் சுரப்பியின் அதீத செயற்பாடு, உடல் சத்துக்களை உறுஞ்சுவதில் உடலுக்கு ஏற்பட்ட மாற்றம் என்பன காரணமாக இருக்கலாம்.

*2. தொடர்ச்சியான காய்ச்சல்*

வழமையில் காய்ச்சல் பற்றி பெரிதாகக் கவலைப்படத் தேவையில்லை. பெரும்பாலும் உடலில் தொற்று ஏற்படும்போது அதை எதிர்த்து உடல் போராடும்போது தான் காய்ச்சல் வருகிறது. ஆனால் மூன்று நாட்களுக்கு மேலாக, அதிவெப்பநிலையுடன் காய்ச்சல் இருந்தால், சிறுநீர்ப் பாதையில் தொற்று, காச நோய் போன்றன காரணமாய் இருக்கலாம்.

*3. வேகமாக மூச்சு எடுத்தல்*

தீவிர விளையாட்டுகளில் ஈடுபடுவோர் போல மூச்சு எடுத்தால் அது நோயின் அறிகுறியே. மூச்சு எடுக்க சிரமப்படுதல், தொய்வு நோய்க்காரர் போன்ற இழுப்புகள் எதுவாக இருந்தாலும், உடனடியாக வைத்திய உதவி பெறுங்கள். தொய்வு, நிமோனியா, சுவாசப்பையில் இரத்தக் கட்டி, நெஞ்சுச் சளி என சுவாசப்பை, இதய நோய்களின் அறிகுறியாக இது இருக்கலாம்.

*4. வழமைக்கு மாறான உடற்கழிவு*

சிவப்பு, கறுப்பு நிறமாய் மலம் கழிதல், தொடர்ச்சியான வயிற்றுப் போக்கு அல்லது மலச்சிக்கல், அடிக்கடி காரணமில்லாமல் மலங் கழிதல் என்பன வைரஸ், பக்ரீறியா தொற்றாகவோ, குடல் புற்றுநோயாகவோ இருக்கலாம். அதிலும் ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு குடல் புற்றுநோய்க்கான வாய்ப்புகள் அதிகம்.

*5. மனக்குழப்பம் ஏற்படுதல்*

திடீரென்று மனம் குழம்புதல், நேரம் மற்றும் இடம் தெரியாமல் தலையைச் சுற்றிக் குழப்பமடைதல், மனதை ஒருநிலைப்படுத்தல் மற்றும் ஞாபகம் வைத்திருக்க முடியாமை, அதிகம் கோபம் அடைதல் போன்ற மனப்போக்கு மற்றும் நடைமுறைச் செயற்பாடுகளில் மாற்றம் போன்றனவும் வேறு நோய்களின் அறிகுறியே. தொற்று, இரத்தத்தில் சீனிக்குறைவு, உடலில் நீர் போதாமை, மன நோய்களின் அறிகுறிகளாகவும் இவை இருக்கலாம். சில நேரங்களில் நீங்கள் வேறு நோய்களுக்கு பயன்படுத்தும் மருந்துகளின் பக்கவிளைவாகவும் இருக்கலாம்.

*6. கொஞ்சம் சாப்பிட்டவுடனேயே வயிறு நிறைந்த உணர்வு*

இந்த உணர்வுடன் தலைச்சுற்று, வாந்தி, காய்ச்சல், உடல் நிறைக்குறைவு, உடல் நிறை அதிகரிப்பு என்பனவும் காணப்படலாம். வயிற்றுக்குள் உள்ள நோய்களில், முக்கியமாக கணையப் புற்றுநோய்க்கான அறிகுறியாகவும் இது இருக்கக் கூடும்.

*7. திடீரென்று வெளிச்சம் தோன்றுதல்*

சில நேரங்களில் ஒற்றைத் தலைவலியாக இருக்கலாம். ஆனால் சில நேரங்களில் கண் விழித்திரையில் மாற்றங்கள் ஏற்படுவதாக இருக்கலாம். இதைக் கவனிக்காமல் விட்டால், சில நேரங்களில் கண் பார்வையை இழக்க நேரிடும்.

நோய்களை நாங்கள் அறிந்து கொள்வதற்கு வசதியாக இயற்கை இந்த அறிகுறிகளைத் தந்து வகை செய்திருக்கிறது. பகுத்தறிவு உள்ள நாங்கள் அவற்றைக் கண்டுணர்ந்து, உரிய சிகிச்சை பெற்று ஆரோக்கியமாக வாழ்வோம்.


## கொல்லைப்புற கமக்காரர்களுக்கு ஓர் அரிய நற்செய்தி

புடோல், தின்னவேலிக் கத்தரி, மகா இலுப்பள்ளம மிளகாய், பயற்றங்காய், தக்காளி, வெண்டி, லீக்ஸ், பீட்ரூட், சுவிஸ் சாட், கியுக்கம்பர், லெமன் கியூக்கம்பர், கேல், கொலார்ட் என பல்வேறு மரக்கறிக் கன்றுகளை 99 சதங்களுக்கு மே நடுப்பகுதி முதல் மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம்.

**1345 Morningside Ave #8**



# முன்னெச்சரிக்கையோடு தலை காப்பீர்

உங்களின் காரில் ஏறிப் பயணத்தை ஆரம்பிக்கும்போது, முதலில் சீட் பெல்ட்டை இழுத்துப் பூட்டுகிறீர்கள். விபத்து நேர்ந்தால், காரில் இருந்து தூக்கி வீசப்படாமல் இருப்பதற்கு, சீட் பெல்ட் அணிவது அவசியம். ஆனால், சீட்டின் மேல் புறமாக, தலையைச் சாய்ப்பதற்கு வசதியாக இருக்கும் ஹெட்றெஸ்ட்டை சரியான முறையில் சரி செய்வதற்கு பலரும் மறந்து விடுகிறார்கள். விபத்து ஏற்படும் போது கழுத்து, மூளை, முள்ளந்தண்டு தொடர்பான காயங்கள், நோவுகள் ஏற்படாமல் தடுக்க இந்த ஹெட்ரெஸ்ட்டுகள் உதவுகின்றன.

**தவறான முறை**



**சரியான முறை**



வேகமாகச் செல்லும் வாகனம் மோதும் போது, உங்கள் உடல் முன்னே தள்ள, தொங்கிக் கொண்டிருக்கும் உங்கள் தலை திடீரென்று தலை பின்னால் தள்ளப்படுகிறது. அப்போது சரியான இடத்தில் ஹெட்ரெஸ்ட் இல்லாவிட்டால், உங்கள் பின் கழுத்துப் பகுதியில் காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. பதினைந்து கிலோமீட்டர் வேகத்தில் செல்லும்போது, விபத்து நடந்தாலே இந்தக் காயம் ஏற்படும் என்றால், பெருந்தெருவில் நூறு கிலோமீட்டர் வேகத்தில் போகும் போது என்ன நடக்கும் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

Whiplash injury எனப்படும் கழுத்து நோ விபத்துகளில் அதிகமாக ஏற்படும் காயமாகும்.

எனவே காரில் பயணிக்கும் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் உயரத்திற்கு தகுந்தது போல, இந்த ஹெட்ரெஸ்டை சரி செய்து கொள்ள வேண்டும்.

இதற்கு முதலில் உங்கள் தலையின் மேற்பகுதியும் ஹெட்ரெஸ்டின் மேற்பகுதியும் ஒரே அளவில் இருக்கக் கூடியதாக ஹெட்ரெஸ்டை உயர்த்துங்கள். ஹெட்ரெஸ்டின் நடுப்பகுதி உங்கள் காதிற்கு சற்று மேலாக இருக்க வேண்டும்.

தலைக்கும் ஹெட்ரெஸ்டுக்குமான இடைவெளி 2 முதல் 4 அங்குலமாக இருக்க வேண்டும். தலை ஹெட்ரெஸ்டில் முட்டிக் கொண்டு இருக்கக் கூடாது.

விபத்து ஏற்பட்டால் உங்கள் தலை தான் ஹெட்ரெஸ்டில் முதலாவதாக முட்ட வேண்டும், கழுத்து அல்ல.

இந்த ஹெட்ரெஸ்ட் வாகனச் சாரதிக்கு மட்டுமல்ல, பயணிகளுக்கும் சேர்த்துத் தான். எல்லோருமே தங்கள் 'தலையைப் பாவித்து' ஹெட்ரெஸ்டை அட்ஜஸ்ட் செய்தால், முன்னெச்சரிக்கை தலை காக்கும்.

# வசதிக்கேற்ற மாடி வீட்டு வாசம்



வீடு வாங்க நினைப்போர்களுக்கு பல்வேறு தெரிவுகள் உள்ளன. பலமாடிக் குடியிருப்பாகவோ, காணி நிலமும் அப்பிள் தோட்டமும் உள்ள தனியான வீடாகவோ உங்கள் தெரிவு இருக்கலாம். வருமானம், வாழ்க்கை முறை, தேவை என்பவற்றைப் பொறுத்து அந்தத் தெரிவுகள் அமையும்.

வருமானம் குறைந்தவர்களும் சொந்தமாக வாங்கக் கூடியதாக கைக்கு எட்டிய விலையில் உள்ளவை கொண்டோ எனப்படும் பலமாடிக் குடியிருப்புகளே. அமைவிடம், அருகில் உள்ள வசதிகள், வீட்டின் அளவு என்பவற்றுக்கு ஏற்ப விலை கூடிக் குறைந்தாலும், ஒப்பீட்டளவில் சொந்த வீடு என்று வரும்போது மலிவானவை இவையே. வீட்டுச் சொந்தக்காரர் ஆவதற்கான முதற்படியாக இதைக் கருதலாம். வீட்டின் விலை அதிகரித்தால் இதை விற்று பின்னால் நீங்கள் பெரிய வீடாகவும் வாங்கலாம். அல்லது இருக்கும் வீட்டை விற்று, குறைந்த விலையில் இவற்றை வாங்கி, லாபத்தை வேறெங்காவது முதலிடலாம். மலிவு விலை என்பதால், வாங்கி வாடகைக்கு விடக்கூடிய முதலீடாகவும் இது அமையும்.

தனியாட்கள், புதிதாக வாழ்க்கை ஆரம்பிக்கும் தம்பதியர், பிள்ளைகள் திருமணமாகி வெளியேறியதால் தனித்த பெற்றோர், வயோதிபர்கள், நகர் மையத்தில் வேலைக்கு அருகில் குடியிருக்க விரும்புவோர் போன்றோருக்கு தொடர்மாடிக் குடியிருப்பில் வீடு பெறுவது வசதியாக இருக்கும்.

நகர் மையத்தில் மட்டுமன்றி, நகரின் பல பகுதிகளிலும் இந்த பலமாடிக் குடியிருப்புகள் பெருமளவில் கட்டப்படுவதால், வாங்குவோருக்கு பல்வேறு தெரிவுகள் செய்ய வசதியாக எங்கும் இவை உள்ளன.

நிலத்துடனான வீடுகளுக்கு இருக்கும் பனி ஒதுக்கல், புல் வெட்டுதல், வேலிச்சண்டை போன்ற தலையிடிகள் இவற்றுக்கு இல்லை. இதைவிட, நீச்சல் தடாகங்கள், உடற்பயிற்சி வசதிகள், கட்டடத்திலேயே கடை, மண்டபம் போன்ற வசதிகள் உள்ளன.

இவற்றுக்கு பாதுகாப்பு கமெரா, பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் உள்ளதால், இவை ஒப்பீட்டளவில் பாதுகாப்பானவை.

ஆனாலும், இவற்றுக்கான சிக்கல்களும் உள்ளன.

மாதாந்தம் பராமரிப்புக்காக பணம் செலுத்த வேண்டி வரும். அந்தத் தொகை வருடாந்தம் அதிகரிக்கலாம்.

பொதுவாழ்வு என்பதால், சட்ட திட்டங்கள், விதிமுறைகள் அதிகம். நினைத்தது போல சத்தம் போட முடியாது. சனிக்கிழமை பார்ட்டி வைத்து கும்மாளம் போட முடியாது. மிருகங்கள் வளர்க்க முடியாது. குழந்தைகள் இருந்தால் கொல்லைப்புறத்தில் ஒடியாட முடியாது. கொல்லைப்புற விவசாயம் சரிப்படாது. சிலநேரங்களில் கார் நிறுத்தும் இடத்திற்கு தனியாக விலை கொடுக்க வேண்டி வரும். மின்சாரம், நீர் தடைப்பட்டால் பெரும் தலையிடி.

என்னதான் இருந்தாலும் கடைசியில் உங்கள் வாழ்க்கை முறை என்ன, வருமானம் என்ன, தேவை என்ன என்பதைப் பொறுத்தே உங்கள் வாழிடத்திற்கான தெரிவு அமையும்.

எனவே முன்னரே சாதக பாதகங்களை சரியாக அறிந்து கொண்டால், உங்கள் புத்திசாலித்தனமான முதலீடாக இது அமையும்.

# பண்டிதராக்கும் நூலகம்

சென்ற இதழில் நூலக அடையாள அட்டையை பெற்று, கண்டதும் கற்றுப் பண்டிதராவது எப்படி என விளக்கியிருந்தோம். இந்த அட்டையின் உதவியுடன் புத்தகங்கள், ஒலிவட்டுகள், ஒளிவட்டுகள் என பலவற்றையும் நூலகத்தில் இரவல் பெறலாம்.

அது மட்டுமன்றி, உங்கள் வீட்டில் இணையத் தொடர்பு இல்லாவிட்டால், நூலகத்தில் இலவசமாக கணனி மூலம் இணையத்தைப் பயன்படுத்த முடியும். பலரும் இந்தச் சேவையைப் பயன்படுத்துவதால், சில நேரங்களில் உங்களுக்கு கணனிகள் கிடைக்காமல் போகலாம். உங்கள் அட்டையின் உதவியுடன், உங்களுக்கு வசதியான நேரத்தில் இணையத்தைப் பயன்படுத்த கணனி நேரம் ஒதுக்கித் தரும்படி பதிவு செய்யலாம்.

அல்லது உங்கள் மடிக்கணனியைக் கொண்டு சென்று அங்கு கம்பியில்லா இணைய இணைப்பை இலவசமாய் பெறவும் முடியும். இதற்கு அட்டை தேவையில்லை.

பல நூலகம் சம்பந்தமான விடயங்களை வீட்டில் இருந்தபடியே இணையத்தின் உதவியுடன் நீங்கள் செய்யலாம். www.torontopubliclibrary.ca என்ற தளத்திற்கு சென்று, உங்கள் அடையாள அட்டை இலக்கத்தையும், அட்டை பெறும்போது பதிவு செய்த உங்கள் தொலைபேசி இலக்கத்தின் கடைசி நான்கு இலக்கங்களையும் பயன்படுத்தி, உள்நுழைந்தால், புதிய உலகமே அங்கு கிடக்கிறது.

உங்கள் இணைய உலாவியில் உரிய மாற்றங்களைச் செய்வதன் மூலம் ஒவ்வொரு தடவையும் உங்கள் அடையாள அட்டை இலக்கத்தைத் திரும்பத் திரும்ப நிரப்பத் தேவையில்லாமல், உலாவி உங்கள் விபரங்களை ஞாபகத்தில் வைக்கச் செய்யலாம். இதற்கான விபரங்கள் நீங்கள் உள்நுழையும் பக்கத்திலேயே கிடக்கிறது.

உள்ளே நுழைந்தால், அங்கு நீங்கள் நூலகத்தில் வாங்கிய பொருட்கள் எவை, எப்போது திருப்பிக் கொடுக்க வேண்டும் என்ற சகல விபரங்களும் உண்டு.

பக்கத்து வீட்டுக்காரரிடம் அம்மிக் குழவி கடன் வாங்கி விட்டு, மறந்த மாதிரி நடிப்பது போலில்லாமல், நூலக இரவல்களை உரிய நாளில் திருப்பிக் கொடுக்க வேண்டும். காலக்கெடுவிற்குள் கொடுக்காவிட்டால், தினசரி அபராதமும் உண்டு.

அபராதத்தைத் தவிர்க்க, உங்கள் பொருட்களை இன்னும் ஒரு தடவை இணையம் மூலமாகவே புதுப்பிக்கலாம். அந்தப் பொருளுக்கு வேறு யாராவது ஏற்கனவே பதிவு செய்திருக்காவிடில், நீங்கள் தொடர்ந்தும் வைத்திருக்கலாம். அல்லது அபராதத்துடன் பொருளைத் திருப்பி ஒப்படைக்க வேண்டும்.

இது மட்டுமல்ல, இந்த அடையாள அட்டையின் மகத்துவமே வேறு. உங்களுக்கு அருகில் உள்ள நூல்நிலையங்களில் மட்டுமல்ல, ரொறன்ரோ முழுவதும் உள்ள நூலகங்களில் உள்ள பொருட்களை நீங்கள் பெற இது வழி வகுக்கிறது. நூலக இணையத் தளத்தில் தமிழ் என்ற வார்த்தையைத் தேடினால் சுமார் 7500 பொருட்கள் ரொறன்ரோ எங்கும் உள்ள நூலகங்களில் உள்ளன. ஆயிரத்திற்கு மேற்பட்ட ஒளிவட்டுகளில், தமிழ்த் திரைப்படங்கள் மட்டுமன்றி, குழந்தைகள் தமிழ் கற்க வசதியான பாடல்கள், பாடங்கள் என்பனவும் உண்டு. ஒலிவட்டுகளில் சினிமாப் பாடல்கள் மட்டுமன்றி, சங்கீதங்கள், இலங்கைப் பொப் பாடல்கள் எல்லாமே உண்டு. புத்தகங்கள், சஞ்சிகைகள் என உள்ள இந்தக் களஞ்சியத்தில் நீங்கள் பெற விரும்பியவற்றை அந்த இணையத்தளத்திலேயே hold என்ற பச்சை பட்டனை அழுத்தி உங்களுக்கு அருகில் உள்ள நூலகத்தில் கிடைக்குமாறு பதிவு செய்து, பெற்றுக் கொள்ளலாம். வந்ததும் உங்களுக்கு மின்னோலை வரும். அல்லது நீங்களே உங்கள் புத்தகம் புறப்பட்டு, உங்களிடம் வந்து சேரும்வரை அதன் பயணத்தை கண்காணிக்கலாம். சில நேரங்களில் அதே புத்தகத்திற்கு வேறு யாராவது பதிவு செய்திருந்தால் வரிசைக் கிரமப்படி உங்களுடைய முறை வரும்போது உங்களுக்குக் கிடைக்கும்.

அடுத்த தடவை இந்த அடையாள அட்டையைக் கொண்டு செய்யக் கூடிய மாயாஜாலங்களைச் சொல்லித் தருகிறோம். அதுவரைக்கும், கண்டதும் கற்றுப் பண்டிதராகுங்கள்... ஞாபகம் இருக்கட்டும், வாசித்து மனிதர்கள் பூரணம் அடைவது உண்மைகளையும், சிந்திக்க வைப்பவற்றை வாசிப்பதால் மட்டுமே!


**வீடு - கனவிலிருந்து கைக்கெட்டிய தூரத்திற்கு!**

**Homelife/Future**
Realty Inc.Brokerage*
Bus:905.201.9977

**Leo Swampillai**
Sales Representative
**416.347.8732**
**leo33@rogers.com**